25th March 1963]

புலவர் கா. கோவிந்தன் : வட ஆற்காடு பின்தங்கிய மாவட்டம். வந்தவாசியில் இருந்த கூட்டுறவு நூற்பாலே வேலூருக்கு சென்றிருக்கிறது. ஆகவே மற்றொரு நூற்பாலேயை வந்தவாசிப் பகுதிக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இக் கேள்வி கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றியது.

எண்ணெய் ஆராய்ச்சி (காவிரி வட்டம்)

*** 362 கேள்வி.—திரு. ஆ. துரை அரசன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில், மத்திய அரசினரால் காவிரி வட்டத்தில் எண்ணெய் ஆராய்ச்சி நடத்தப்படுகின்றதா ?

(இ) ஆமென்றால், விபரமென்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம்.

(இ) காவேரி நதி பிராந்தியங்களில் மத்திய எண்ணெய் வள ஆராய்ச்சியாளர்களால் Seismic Survey நடந்து கொண்டிருக்கிறது. அது இன்னும் சில காலத்துக்கு நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் பட்டுக்கோட்டை பிராந்தியத்தில் மேலும் தீவிர ஆராய்ச்சி செய்ய மேற்கண்ட ஆராய்ச்சியாளர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள்.

பிறநாடுகளில் தமிழ் இலக்கிய வளர்ச்சி

*** 363 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ் இலக்கியப் பெருமையை, உலக நாடுகள் எல்லாம் உணர்ந்து பாராட்டுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் தமிழக அரசு மேற்கொண்டிருக்கும் திட்டங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No special schemes have been formulated.

புலவர் கா. கோவிந்தன் : பிற நாட்டு அறிஞர்கள் தமிழின் பெருமையை அறிந்து நம் நாட்டில் அதைக் கற்க வந்திருக்கிறார்கள். இந்நிலையில் உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் தமிழின் பெருமையை அறிய இங்கிருந்து தமிழ் அறிஞர்களை அனுப்பி தமிழ் இலக்கியப் பெருமையைப் பரப்ப இந்த அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது தமிழின் பெருமையை உணர்ந்து அதைக் கற்றுக் கொள்ளவும் அனுபவிக்கவும் முற்படுகிறார்கள். தமிழ் அறிஞர்கள் பிற நாடுகளுக்கும் அனுப்பப்படுகிறார்கள். இதற்காக பிரத்தியேகமாக அரசாங்கம் ஒரு திட்டத்தை உருவாக்கவில்லை. அப்படி உருவாக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : வடநாட்டில் அலகபாத் போன்ற இடங்களிலுள்ள கல்லூரிகளில் தமிழுக்கு பணம் ஒதுக்கிக் கொடுப்பது போன்று நம் தூதுவராலயங்கள் மூலம் தமிழைப் பரப்ப ஏதாவது முயற்சி செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நம் நாட்டிலே பல்கலைக் கழகங்களுக்கு ஏதோ ஒரு அளவு நிதி உதவி அளிக்கப்படுகிறது. அலகபாத் யூனிவர்சிடி, டெல்லி யூனிவர்சிடி, கேரள யூனிவர்சிடி, ஹைதராபாத் உஸ்மானியா யூனிவர்சிடி, ஆக்ரா யுனிவர்சிடி இவற்றிற்கு நிதி அளிக்கிறோம். வெளிநாடுகளுக்கு நிதி உதவி அளிக்கவேண்டிய அவசியமில்லை.

[25th March 1963

திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தி மொழி வளர்ச்சிக்கு என்று இந்தியப் பேரரசினர் நிதி ஒதுக்கியிருப்பதுபோல் தமிழ் வளர்ச்சிக்கும் இந்தியப் பேரரசினர் நிதி ஒதுக்குகின்றனரா ? இல்லையெனில் அப்படி ஒதுக்குமாறு இந்த அரசாங்கம் மத்திய அரசினரைக் கேட்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தமிழ் வளர்ச்சிக்கும் மத்திய ஆட்சியினர் உதவி அளித்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால் அதன் விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. தனியாக விவரங்கள் கேட்டால் சொல்லுகிறேன். ஆனால் அவர்கள் உதவி அளித்துக்கொண்டுதான் வருகிறார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : உலகப் புகழ் பெற்ற திருக்குறளை ஆங்கிலத்தில் பலர் மொழிபெயர்த்திருக்கிறார்கள். அதில் எது நல்லதாக இருக்கிறதோ அதை எடுத்து நம் சர்க்காரே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உலகமெல்லாம் பரப்ப முன்வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆங்கிலத்தில் மட்டும் அல்ல, பல மொழிகளில் குறள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புக்கள் இருக்கின்றன. ஆகவே, தனியாக இந்த ஆட்சியினர் ஒரு பதிப்பு போட வேண்டுமென்று கருதவில்லை.

Madras Legislative Assembly (increase of seats)

* 364 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to make representations to the Delimitation Commission suggesting increase of seats for the Madras Legislative Assembly;

(*b*) if so, whether a copy of the memorandum will be placed on the Table of the House ; and

(*c*) whether the Government propose to convene a conference of all the Leaders of Political Parties, to consider these suggestions?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) There is no proposal before the Government at present.

(*b*) & (*c*) Do not arise.

திரு. கே. ஏ. மதியழகன் : அப்படி வருகிற நேரத்தில் ஏழு அங்கத்தினர்களுக்கு ஒரு பார்லிமெண்ட் தொகுதி அமைக்கவேண்டுமென்று இந்த அரசாங்கம் வற்புறுத்துமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுபற்றி இது சம்பந்தமான விவாதத்தில் கூறினேன். இப் பிரச்னை வரும்போது என்ன செய்ய வேண்டும் என்பதை இந்த அரசாங்கம் யோசித்து முடிவு செய்யும்.

திரு. எஸ். முருகையன் : ஆந்திராவில் ஒரு லட்சம் மக்களுக்கு ஒரு சட்டசபை அங்கத்தினர் வீதம் இருக்கிறார்கள். இங்கு 1½ லட்சம் மக்களுக்கு ஒரு அங்கத்தினர் என்று இருக்கிறது. ஆகவே இதை மாற்றி ஒரு லட்சம் மக்களுக்கு ஒரு அங்கத்தினர் வீதம் ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆந்திராவில் என்ன வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்து அப்படியே காப்பி அடிக்கவேண்டிய அவசியமில்லை. முன்பு கூறியதுபோல் இப்பிரச்னை வரும்போது நாம் ஏதாவது மாற்றவேண்டுமா, எப்படி மாற்றுவது என்று யோசித்து முடிவு செய்யப்படும்.